1995 ஏப்ரல் 24] [திரு. எஸ். கண்ணப்பன்]

மெயின்டனென்ஸ் பிரச்சினை வரும்போது சில நேரங்களில் இப்படித்தான் ஏற்படும். மெஷினரிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. எந்த நேரத்தில் நிற்கும் என்று சொல்ல முடியாது. திடீரென்று ஒருபழுது ஏற்பட்டுவிட்டால் நின்றுவிடுகிறது. ஆகவே இதை நாம் உடனடியாக பழுதுபார்க்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட சிற்சில இடர்பாடுகள் வருகின்றபோது - இது நிரந்தரமாக இருந்தால்தான் பிரச்சினை - அது களையப்பட்டு இப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் அப்பகுதியில் மின்சார விநியோகம் ஒழுங்காக இருக்கும். ஏதாவது குறைகள் இருந்தால் அமைச்சரிடத்திலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரிக்கைகளாக எழுதித் தரலாம். நான் அதைப் பரிசீலிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல், 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

முற்பகல் 11-20

***மாண்புமிகு டாக்டர் இரா . நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.